**இனிமையான குழந்தைகளே! எதுவரை ஆத்மா தனது பாகத்தை ஏற்று நடிக்கிறதோ அதுவரை அதற்கு 100% ஓய்வு கிடைக்க முடியாது. ஓய்வு கிடைப்பது நிர்வாண தாமத்தில் (பரந்தாமம்) தான். அங்கு எந்தவித நடிப்பின் பாகமும் கிடையாது**

கேள்வி: எந்த குழந்தைகள் போகப்போக படிப்பில் களைத்து விடுகிறார்களோ அவர்களுக்கு பின் எந்த ஒரு எண்ணம் வருகிறது மற்றும் அது பின்னால் (விகல்பத்தின்) தீய எண்ணங்களின் ரூபமாக ஆகிவிடுகிறது?

பதில்: (1) அவர்களுக்கு தந்தையை விட்டுவிடும் அதாவது கைவிட்டுச் சென்று விடும் எண்ணம் (தீர்மானம்) வருகிறது. பாபா கூறுகிறார் இந்த (சங்கல்பம்) எண்ணம் வருவது கூட (விகல்பம்) தீயவை விளைவிப்பதாக ஆகும். இவ்வாறு சங்கல்பம் செய்வது கூட பாவம் ஆகும். படிப்பு படிக்காமல் இருப்பது என்றாலே களைத்து விடுவது. அப்பேர்ப்பட்ட குழந்தைகள் தங்களது (வளங்களை) ஆஸ்தியை கெடுத்துக் கொள்கிறார்கள். (2) ஏதாவதொரு விஷயத்தின் காரணமாக யாராவது தாய் தந்தையரிடம் கோபித்துக் கொண்டு விடுகிறார்கள் என்றால் அவர்கள் 21 பிறவி களுக்கான அரசாட்சியை இழந்து விடுகிறார்கள்.

பாடல்: இன்று மனிதன் இருளில் உள்ளான்......

ஓம்சாந்தி! இது பக்தியின் பாடல் அல்லது பிரார்த்தனை. யாரிடம் பிரார்த்தனை செய்கிறார்கள்? பகவானிடம். ஆனால் காரிருளில் இருக்கும் காரணத்தால் பகவானை அறியாமலேயே இருக்கிறார் கள். எனவே இப்பொழுது யார் கேட்பது? பகவான் அவர்களது கூக்குரலைக் கேட்டால் தான் பிறகு அவர் வந்து ஜோதியை எழுப்ப முடியும். ஆனால் குழந்தைகள் பகவானை அறியாமலேயே இருக்கும் பொழுது பின் எப்படி கேட்க முடியும்? இப்பொழுது நீங்கள் முன்னால் அமர்ந்துள்ளீர்கள். பகவான் உங்களை காரிருளிலிருந்து பிரகாசமான வெளிச்சத்திற்கு அழைத்துச் சென்று கொண்டிருக் கிறார். பிரம்மாவின் இரவு மற்றும் பிரம்மாவின் பகல் என்றும் பாடுகிறார்கள். இரவில் ஆங்காங்கே நிறைய அலைகிறார்கள். மலைகளின் மீதும் கோவில்கள், குளங்கள், மசூதிகள் என்று செல்கிறார் கள். ஆனால் பகவான் எங்கு கிடைப்பார்? பகவானின் பிறவி கூட பாரதத்தில் கொண்டாடுகிறார்கள். சிவராத்திரி என்று கூறுகிறார்கள் அல்லவா? அவரது ஞாபகார்த்த சிலைகளும் பாரதத்தில் சரியாகவே உள்ளன. ஆனால் அவர் எப்பொழுது வருகிறார் என்பது புரியாமல் இருக்கிறார்கள். முற்றிலும் காரிருளில் இருக்கிறார்கள். இப்பொழுது நீங்கள் காரிருளில் இல்லை நீங்கள் நம்பர் பிரகாரம் புருஷார்த்தப்படி வெளிச்சத்தில் வந்து கொண்டேயிருக்கின்றீர் கள். இந்த முழு சிருஷ்டியின் படைப்பு யார் மற்றும் எப்படி செய்கிறார் என்பதை குழந்தைகளாகிய நீங்கள் அறிந்துள்ளீர்கள்.

நீங்கள் இங்கு வந்துள்ளீர்கள் ஈஸ்வரிய விஷ்வ வித்தியாலத்திற்கு. இங்கு இறைவன் கற்பிக் கிறார், மனிதனை தேவதை ஆக்குகின்றார். இந்த ஞானத்தை உங்களிடையேயும் நம்பர் பிரகாரம் புரிந்துள்ளீர்கள். ஒரு சிலரோ நல்ல முறையில் புரிந்துள்ளார்கள். ஒரு சிலரோ முழுமையாக புரிந்து

கொள்ளாதவர்கள், ஓடி விடுபவர்களாக ஆகிவிடுகிறார்கள். தாய் தந்தையிடம் கோபித்துக் கொள்கின்றார்கள் என்று அவர்களுக்காகப் பாடப்பட்டுள்ளது. பார்த்தார்கள், கேட்டார்கள், கூறினார் கள் பிறகு கோபித்துக் கொண்டு சென்று விடுகின்றார்கள்... தாய் தந்தையிட மிருந்து நமக்கு 21 பிறவிகளுக்காக சொர்க்கத்தின் அரசாட்சி கிடைக்கிறது என்பதை அறிந்திருக்கிறார்கள். பிறகும் மறந்து விடுகிறார்கள். பாபா புரிய வைக்கின்றார் - எதற்கு சாந்தி என்று கூறப்படுகிறதோ அது கிடைப்பதே சாந்திதாமம் அல்லது நிர்வாண தாமத்தில். அதற்கு முக்தி தாமம் என்றும் கூறப்படு கின்றது. யாராவது ஒருவேளை நான் 100 சதவிகிதம் ஓய்வில் இருக்கிறேன் என்று கூறு கிறார்கள் என்றால் உண்மையில் இப்படி ஒரு வார்த்தையே இருக்க முடியாது. ஏனெனில் நாள் முழுவதிலும் ஏதாவதொரு காரியம் அவசியம் நடந்து கொண்டேதானிருக்கும். ஆம், சிறிது நேரத்திற்கு இரவில் தூக்கத்தை ஓய்வு என்று கூறுகிறார்கள். ஏனெனில் ஆத்மா கூறுகிறது, நான் நாள் முழுவதும் கர்மம் செய்து களைத்துவிட்டேன். இப்பொழுது ஓய்வு எடுக்கின்றேன். தன்னை உடலிலிருந்து விடுபடுத்திக் கொள்கிறார்கள். தந்தை இருப்பதே சாந்திதாமத்தில் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர் களா? அல்லது பரமபிதா பரமாத்மா அங்கு ஓய்வில் இருக்கின்றார் என்று நினைக்கிறீர்களா? பரமாத்மா ஓய்வில் எப்பொழுது இருப்பார் என்றால் அவருக்கு பாகம் இல்லாத பொழுது தான். முக்தி தாமத்தில் எந்த காரியமும் செய்வதில்லை. இதுவும் மிகவும் புரிந்து கொள்ள வேண்டிய விஷயங் களாகும். இப்பொழுது உங்களது புத்தியின் பூட்டு திறந்து கொண்டே போகிறது. நான் எப்பொழுது இருப்பேன் என்று உங்களுக்குத் தெரியுமா என்று தந்தை கேட்கின்றார். குழந்தைகளாகிய நீங்கள் சொர்க்கத்தில் சுகத்தில் இருக்கும் பொழுது நான் ஓய்வில் இருக்கிறேன். அங்கு உங்களுக்கு சுகம் சாந்தி உள்ளது. அது ஓய்வு என்று கூறப்படமாட்டாது. எப்பொழுது உங்களுக்கு எந்த பார்ட்டும் இல்லையோ அது தான் ஓய்வு என்று கூறப்படும். நீங்கள் சொர்க்கத் தில் இருக்கும் பொழுது எனக்கு எந்த முயற்சியும் செய்ய வேண்டியதில்லை. நான் அங்கு (பரந்தாமத்தில்) சாந்தியில் இருக்கிறேன். சாந்தியின் மறு வார்த்தையாக அங்கு ரெஸ்ட் (ஓய்வு) என்று கூறுவார்கள். இங்கோ ஓய்வில் இருக்க முடியாது. ஆத்மா கூறுகிறது, நான் எப்பொழுது ஓய்வில் இருக்கிறேன் என்றால் இரவு உறங்கும் பொழுது, அச்சமயம் நான் ஓய்வாக இருக்கிறேன் அல்லது அமைதியில் இருக்கிறேன் - இரண்டுமே ஒரே விஷயம் தான். இரவில் அசரீரி ஆகிவிடு கிறீர்கள். சாந்தமாக ஆகிவிடுகிறீர்கள். பிறகு எழுந்திருக்கும் பொழுது கர்மத்தில் வருகிறீர்கள். பிறகும் ஓய்வற்ற நிலை ஆகும். கர்மம் செய்யும் பொழுது ஓய்வற்ற நிலை அனுபவம் ஆகிறது. சத்யுகத்தில் அமைதியின்மை என்ற கேள்விக்கே இடமில்லை. அமைதி யற்றவராக ஆக்குவது மாயை ஆகும். அங்கு நாங்கள் ஓய்வில் இருக்கிறோம் என்று கூறமாட்டார்கள். வேலை, தொழில் எல்லாமே செய்கிறார்கள். ஆனால் அசாந்தியாக இருப்பதில்லை. மற்றபடி ஓய்வு என்ற வார்த்தை இருக்காது. உதாரணமாக ஒருவர் நான் ஓய்வுக்காக சிம்லா செல்கிறேன் என்று கூறுகிறார் என்று வைத்துக் கொள்வோம். ஆனால் ஓய்வு என்பதற்கு பொருளே இல்லை. உண்மையில் ஓய்வு எப்பொழுது என்றால் நாம் நிர்வாணதாமத்தில் இருக்கும் பொழுதுதான். அங்கு அமைதியாக இருக்கிறோம். மற்றபடி ஓய்வு யாருக்குமே கிடையாது. யாராவது எங்களுக்கு 100% ஓய்வு உள்ளது என்று கூறுகிறார்கள் என்றால் அது தவறு ஆகும். அது அஞ்ஞானம் என்று கூறுகிறோம். படிக்காமல் இருப்பது, ரெஸ்ட் எடுப்பது இதுவே பிறகு களைத்து விடுவது ஆகிவிட்டது.

தங்களுடையதே (வளங்களை) ஆஸ்தியை தானே கெடுத்துக் கொள்கின்றார்கள். புரிய வைக்கப் படுகிறது - ஏ! இரவின் பிரயாணியே! சொர்க்கத்தின் பாதையில் நடக்க நடக்க களைத்து விடாதே. கோபித்துக் கொள்ளாதே. தந்தையரை கைவிட்டு விட வேண்டும் என்ற எண்ணம் கூட வரக்கூடாது. இந்த சங்கல்பம் செய்தீர்கள் என்றால் அது விகல்பம் (தீயது) என்று கூறப்படும். எப்பேர்ப்பட்ட தாய் தந்தை என்றால் அவர்களிடமிருந்து சொர்க்கத்தின் இராஜ்யம் கிடைக்கிறது. பின் அவர்களுக்காக இப்பேர்ப்பட்ட எண்ணம் கூட ஏன் வர வேண்டும். எழுதுகிறார்கள் சில சமயம் விட்டுவிடலாமா, ஒன்றுமே புரிவதில்லை என்று. அவ்வப்பொழுது சங்கல்பம் வருகிறது என்று. அட புரிந்து கொள்வதற்கான நேரமே இது அல்லவா? புரிந்து கொள்வது என்றால் படிப்பது. நாம் படித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஞானக்கடலான உயர்ந்ததிலும் உயர்ந்த பரமாத்மாவை யாருமே தெரிந்து கொள்ளவில்லை. பிரம்மா-விஷ்ணு-சங்கர் அல்லது லட்சுமி-நாராயணரை தெரிந்திருக்கிறார்கள். ஆனால் லட்சுமி-நாராயணர் எப்பொழுது இராஜ்யம் அடைந்தார்கள், மற்றும் யார் கொடுத்தார்கள் என்பது பாரதவாசிகளுக்குத் தெரியாது. மாயை முற்றிலுமே காரிருளில் ஆழ்த்தி விட்டது. தந்தை வந்து புரிய வைக்கின்றார் படைப்பு கர்த்தாவான தந்தை எப்படி மனித சிருஷ்டியை படைக்கிறார் என்று. இதுவோ யாருக்குமே தெரியாது. தந்தையே வந்து புரிய வைக்கின்றார். பிரஜாபிதா பிரம்மாவை படைப்பவர் என்று கூறமாட்டார்கள். பிரஜாபிதா என்று தான் கூறப்படுகிறது. ஆனால் அவர் படைப்பவர் அல்ல. மனிதர்கள் எங்களை அல்லா படைத்தார் என்று கூறுகிறார்கள். நிராகார தந்தையைத் தான் படைப்பவர் என்று கூறுவார்கள். படைப்பவரான தந்தையை அவசியம் மனிதர்கள் தானே தெரிந்து கொள்வார்கள். மிருகங்களோ தெரிந்து கொள்ளாது அல்லவா? மிருகமோ எங்களை பரமாத்மா படைத்தார் என்று வாயால் கூறாது. மனிதர்கள்தான் எங்களை பகவான் படைத்தார் என்று கூறுவார்கள். எனவே தந்தை வந்து புரிய வைக்கின்றார். நீங்கள் பாருங்கள் இந்த படைப்பை எப்படி படைத்தேன் என்று. முதன் முதல் படைப்பு முகவம்சாவளியினுடையது (வாய்வழி ஞானத்தால்) ஆகிறது. பையன் பெரியவனான பிறகு தந்தை ஆகிறான். இந்த எல்லையில்லாத தந்தை கூறுகிறார், பாருங்கள் நான் கூட எப்படி படைப்பை படைக்கிறேன். இவருக்குள் பிரவேசித்து இவருடைய வாய் மூலமாகக் கூறுகிறேன். ஹே, ஆத்மா, நீ என்னுடையவன் ஆவாய். நான் உனது தந்தை ஆவேன். பின் இவர் மூலமாக குழந்தைகளாகிய உங்களை படைக்கிறேன். முகவம்சாவளி ஆவீர்கள். பின் நீங்கள் குகவம்சாவளி கூட (விகாரிகள்) ஆவீர்கள். தந்தை கூறுகிறார் நீங்கள் என்னுடையவர் ஆவீர்கள். பின் நீங்கள் தேவதா குடும்பத்தில் செல்வீர்கள். தந்தை இந்த ஈஸ்வரிய படைப்பை எப்படி படைக்கிறார் என்பதை யாருமே புரிந்து கொள்ளவில்லை. தந்தை புரிய வைக்கின்றார். இவர் (பிரம்மா) கூட கூறுகிறார், நானும் முகவம்சாவளி ஆகிறேன் என்று. தந்தையுடன் கூட தாய் அவசியம் வேண்டும். நாங்கள் பிரஜாபிதா பிரம்மாவின் முகவம்சாவளி ஆவோம், சிவபாபா எங்களை தன்னுடையவர் ஆக்கியுள்ளார் என்று நீங்கள் கூறுகிறீர்கள். அவருக்கு சரீரமோ வேண்டும் அல்லவா? சிவபாபாவிற்கோ சரீரம் இல்லை. சரீரத்தைக் கடனாக எடுக்கின்றார். பிறகு கூறுகிறார், நீங்கள் என்னுடையவர் ஆவீர்கள். இதற்குத்தான் முகவம்சாவளி என்று கூறப்படுகிறது. சிவபாபா இந்த வாயால் இந்த மனைவி (பிரம்மா) மூலமாகக் கூறுகிறார் நீங்கள் எனது குழந்தைகள் ஆவீர்கள். தந்தை தான் புரிய வைக்கிறார் மற்ற எந்த

சாஸ்திரங்கள் ஆகியவற்றில் இந்த விஷயங்கள் இல்லை. நீங்கள் இப்பொழுது கேட்கிறீர்கள். பின் மறைந்து போய் விடும்.

இச்சமயம் காரிருளாக உள்ளது. தந்தை வந்து வெளிச்சமாக்குகிறார். அதனால் தான் பிரம்மாவின் இரவு பிரம்மாவின் பகல் என்று பாடப்பட்டுள்ளது. ஏதோ ஒன்று இருக்கிறது தானே. பொய்யே பொய், சிறிதளவு கூட உண்மையில்லை என்று பாடப்பட்டுள்ளது. ஆனால் தந்தை கூறுகிறார் - பெரும்பாலும் ஏதாவது கொஞ்சம் இருக்கிறது, பிரளயம் ஆகிவிடுவதில்லை. கொஞ்சம் பேர் இருப்பார்கள். பிறகு விருட்சம் வளர்ச்சி அடைகிறது. மனிதர்கள் பிறகு மகாபிரளயம் காண்பித்துள்ளார்கள். ஆனால் மகாபிரளயம் ஒரு பொழுதும் ஆவதில்லை. அப்படி இன்றி மகாபிரளயத்திற்குப் பிறகு கடலில் குழந்தை ஆல் இலையில் வந்தது என்பது அல்ல. இவை எல்லாம் பொய் ஆகும். தந்தை வந்து புரிய வைத்துள்ளார், நீங்கள் கர்ப்பம் என்ற அரண்மனை யிலிருந்து வரும்பொழுது அங்கு ஆனந்தமாக இருப்பீர்கள். அங்கு துக்கம், பாவ கர்மம் ஏற்படுவது இல்லை. அது இருப்பதே புண்ணிய ஆத்மாக்களின் உலகமாக. இது பாவத்தின் உலகமாகும். இங்கு எல்லாவற்றையும் தியாகம் செய்து நீங்கள் சதா புண்ணிய ஆத்மா ஆகிறீர்கள். நீங்கள் எவ்வளவு புண்ணியம் செய்கிறீர்கள் என்றால் அரைக் கல்பம் உங்களை யாரும் பாவ ஆத்மா என்று கூறமாட்டார்கள். நீங்கள் அழிவில்லா புண்ணிய ஆத்மா ஆகிவிடுவீர்கள். இங்கு பின் அரைக் கல்பம் பாவ ஆத்மா என்று கூறுவார்கள். அடிக்கடி தான புண்ணியம் செய்து கொண்டே இருப்பார்கள். பாரதம் முழுமையான தர்மாத்மா என்று கூறப் படுகிறது. பாரதத்தில் தான் புண்ணியம் செய்கிறார்கள். இந்த உலகத்தை நாம் விடப்போகிறோம் பிறகு இங்கு வரவேண்டிய தில்லை என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள். இந்த உலகத்தின் சாமான்களை நீங்கள் புது உலகத்திற்கு டிரான்ஸ்ஃபர் செய்கிறீர்கள். மனிதர்கள் இறைவன் பெயரில் அர்ப்பணம் செய்கிறார் கள். அதாவது அடுத்த பிறவிக்காக டிரான்ஸ்ஃபர் செய் கிறார்கள். இங்கு நீங்கள் 21 பிறவிகளுக்காக டிரான்ஸ்ஃபர் செய்கிறீர்கள். எனவே நிறைய தேவை அல்லவா? உங்களுடைய எல்லா குப்பைக் கூளங்களையும் வாங்கிக் கொண்டு புதியதை கொடுக்கின்றார். பழையதை வாங்கிக் கொண்டு தங்கத்தினுடையது கொடுக்கின்றார். நீங்கள் உண்மையுடன் தந்தைக்குக் கொடுக்கிறீர்கள். தந்தையும் உங்களுக்கு எல்லாமே கொடுக்கிறார். இதுவரையும் நடந்து கொண்டு வந்திருந்த உங்களது பாகமானது டிராமாவில் இருந்தது. எல்லோரும் வீடு வாசலை விட்டார்கள். இல்லா விட்டால் பசு கொட்டகை எவ்வாறு அமையும்? மனிதர்களோ பட்டி எவ்வாறு அமைகிறது என்று அறியாமல் இருக்கிறார்கள். அவர்களோ பூனைக்குட்டிகள் ஆகியவை இருந்தன என்று காண்பிக் கிறார்கள்.

இந்த எல்லா ஞானமும் குழந்தைகளாகிய உங்களுக்கு இப்பொழுது உள்ளது. பின்னர் அங்கு இந்த ஞானம் இருக்காது. நாம் இவ்வாறு 21 பிறவிகள் ஆட்சி புரிவோம் பிறகு விழுந்து விடுவோம் ... அங்கு இந்த ஞானம் இருப்பதில்லை. திரிகாலதரிசி தன்மையின் பாகம் உங்களுடையது. இப்பொழுது தான் இருக்கிறது. முக்கிய ஹீரோ ஹீரோயினுடைய பாகம் உங்களுடையது தான் ஆகும். வேறு யாருக்கும் பாகம் இல்லை. அசுரனிலிருந்து தேவதை பின் தேவதையிலிருந்து அசுரனாக பாரதவாசிகளாகிய நீங்கள் தான் ஆகிறீர்கள். மற்றதோ நடுவில் உபகாட்சிகள் ஆகும். நாடகத்தில் நடுவில் நகைச்சுவை

காட்சிகள் கூடவருகின்றன அல்லவா? அரைக் கல்பத்திற்கு பின்னர் தேவி தேவதா தர்மம் மறைந்து விடுகிறது. உங்களது புத்தியில் இந்த முழு சக்கரம் சுற்றிச் கொண்டேயிருக்கிறது அதனால்தான் நீங்கள் புரிய வைக்கிறீர்கள் அல்லவா? பரமபிதா பரமாத்மா கூட பரம ஆத்மா ஆவார். பரந்தாமத்தில் இருப்பவர். தந்தை கூறுகிறார் எனக்குள் முழு ஞானமும் உள்ளது. நான் மனித சிருஷ்டிக்கு வித்தானவன். சைத்தன்யமானவன். (உயிர் பொருள்) ஆவேன். அதுவோ ஜட விதைகளாக உள்ளன. சிவனோ சைத்தன்யமானவர் ஆவார். அவரது நினைவுச் சின்னமாகிய சிலை பூஜிக்கப்படுகிறது. தற்சமயம் அரசாங்கம் மரங்களின் நாற்று நடுகிறது. இதுவோ சைதன்ய விதை. மனித சிருஷ்டி என்ற மரத்தின் விதையானவர் கூறுகிறார்: எனக்கு முழு விருட்சம் பற்றிய ஞானம் உள்ளது.

எனவே யாராவது நான் 100 சதவிகிதம் ஓய்வில் இருக்கிறேன் என்று கூறினால் 100 சதவிகிதம் ஓய்வோ ஒரு பொழுதும் கிடைப்பதில்லை என்பதை புரிய வைக்க வேண்டும். ஆம் சொர்க்கத்தில் 100 சதவிகிதம் தூய்மை, சுகம், சாந்தி இருக்கும் என்று கூறலாம். பெயரே சொர்க்கம் ஆகும். தந்தைக்கு சத் ஸ்ரீ அகால் (சத்தியமானவர் காலனுக்கு அப்பாற்பட்டவர்). சத்தியத்தைக் கூறுபவர் என்று கூறுகிறார்கள். அவரை எந்த காலனும் சாப்பிடுவதில்லை. அவர் காலன்களுக்கெல்லாம் காலன் என்று கூறப்படுகிறார். இது சீசீ உலகம் ஆகும் என்று தந்தை கூறுகிறார். இந்த மூங்கில் காட்டிற்கு அவசியம் நெருப்பு பிடிக்கப் போகிறது. இந்த மகாபாரத போர் மகா கல்யாணகாரி (நன்மை உடையது) என்பதை குழந்தைகளாகிய நீங்கள் அறிந்துள்ளீர்கள். மனிதர்கள் சாந்தி ஆகிவிடட்டும் என்று வேள்வி ஏற்படுத்துகின்றார்கள். அப்படி என்றால் சொர்க்க வாசல் திறக்கக் கூடாது என்று கருதுகிறார்கள் நீங்களோ கரவொலி எழுப்புகின்றீர்கள் - மூங்கில் காட்டிற்கு நெருப்பு பிடித்தால் தான் நாம் புது உலகம் வைகுண்டம் செல்லலாம் என்று. இந்த விநாச ஜுவாலை இந்த ருத்ர ஞான யக்ஞத்திலிருந்து தான் மூட்டப்படுகிறது. யார் தந்தையினுயைடவர் ஆவார்களோ அவர்களே சொர்க்கத்தின் எஜமானர் ஆவார்கள். மற்ற அனைவரும் கணக்கு வழக்கு முடித்து திரும்பிச் செல்ல வேண்டும். இப்பொழுது முக்திதாமம் சென்று பிறகு மீண்டும் நமது பார்ட்டை திரும்ப வந்து நடிக்க வேண்டும் என்று நீங்கள் அறிந்துள்ளீர்கள். சத்யுகத்தில் இத்தனை தேவி தேவதைகள் எல்லோரும் எங்கிருந்து வந்தார்கள்? மனிதனை பரமாத்மா தேவதை ஆக்குகிறார். உங்களை சோழியிலிருந்து வைரம் போல தூய்மையில்லாத நிலையிலிருந்து தூய்மையாக ஆக்குகிறார். எந்த அளவு யார் ஞானத்தை தாரணை செய்வார்களோ அந்த அளவு பதவி அடைவார்கள். இராஜதானி ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது. நாம் நமக்காக சொர்க்கத்தின் ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறோம். ஸ்ரீமத்படி என்பதை நீங்கள் அறிந்துள்ளீர் கள். யாராவது ஸ்ரீமத்திடம் கோபித்து கொண்டு தங்கள் வழிப்படி நடந்தார்கள் என்றால் அது இராவணனின் வழி ஆகிவிடும். எனவே ஒவ்வொரு அடியிலும் நீங்கள் ஸ்ரீமத் பெற்று கொண்டே இருங்கள். தந்தை உயிருடன் நீங்கள் இருக்கும் பொழுதே உங்களை டிரஸ்டி ஆக்குகிறார். நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு தாய், தந்தை மற்றும் பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

(1) முழுமையான வள்ளல் ஆக வேண்டும். நேர்மையுடன் அனைத்தையும் தந்தைக்கு அர்ப்பணம் செய்து புது உலகத்திற்காக மாற்றம் செய்து விடவேண்டும்.

(2) உயிருடன் இருக்கும் பொழுதே டிரஸ்டி ஆக வேண்டும். ஒவ்வொரு அடியிலும் தந்தையிடம் ஸ்ரீமத் பெற வேண்டும். ஒருபொழுதும் ஸ்ரீமத்படி நடந்து கொள்ள முடியாமல் கோபித்துக் கொண்டு மனம் கூறும் வழிப்படி செல்லக்கூடாது.

வரதானம்: இணைந்த ரூபமாகி சேவையில் இறை மந்திரத்தை அனுபவம் செய்பராகி இறை சேவனாகுக

தன்னை ஒரு சேவாதாரியாக மட்டுமின்றி ஈஸ்வரிய சேவாதாரி என புரிந்து சேவை செய்க. இந்த நினைவால் நினைவும், சேவையும் இயல்பாகவே இணைந்து விடும். எப்போது இறைவனை சேவையிலிருந்து விலக்கி வைப்பீர்களோ அப்போது தனிமையாகும் காரணத்தால் இலக்கு தொலைவில் தென்படுகிறது. எனவே சேவகனாக மட்டுமின்றி இறை சேவகன் நான் என்ற இந்த பெயர் என்றென்றும் நினைவிலிருந்தால் சேவையில் தானாகவே இறை மந்திரம் நிரம்பிவிடும். பிறகு நடக்காததும் நடந்தேறும்.

சுலோகன்: கர்மயோகி ஆக வேண்டுமெனில் கமல ஆசனதாரி (விலகியும், அன்பாகவும்) ஆகுக.